**மே – 04**

# TNPSC துளிகள்

- ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு முன்னெடுப்புகளின் ஒரு செயல் திட்டத்தினைப் பட்டியலிடுவதற்காக, நதி நகரங்கள் கூட்டணியின் (RCA) கீழ் வருடாந்திர விரிவான செயல் திட்டத்திற்கு தேசியத் தூய்மை கங்கை திட்டம் (NMCG) ஒப்புதல் அளித்து உள்ளது.
- பீகார் மாநிலமானது, 2025 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக, புத்த கயாவில் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய மதுபானி ஓவியம் (201.17 சதுர அடி) மற்றும் 375 புத்தத் துறவிகளால் மேற்கொள்ளப் பட்ட பாடல் கிண்ண ஒலிப்பு நிகழ்வு ஆகிய இரண்டு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்துள்ளது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியைச் சான்றளிப்பதற்கும் வெளிப்படைத்தன்மை, கண்டறியும் தன்மை மற்றும் சந்தை நம்பகத் தன்மையை உறுதி செய்வதற்கும் என்று ஒரு மிக வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்காக இந்தியப் பசுமை ஹைட்ரஜன் சான்றிதழ் திட்டத்தினைத் (GHCI) தொடங்கியுள்ளது.
- தேசியத் துளிமக் கணிம (குவாண்டம்) திட்டத்தின் (NQM) கீழ், QNu லேப்ஸ் நிறுவனமானது, மேகக்கணிமை, உள்ளகச் சேவையகம் அல்லது கலப்பு நுட்பம் என எந்தவிதச் சூழலிலும் தடையற்றக் குறியாக்கவியல் மேலாண்மையைச் செயல்படுத்துகின்ற QShield எனப்படும் உலகின் முதல் மற்றும் தனித்துவமான தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பெங்களூருவில் உள்ள QpiAI நிறுவனமானது, QpiAI-இண்டஸ் எனப்படும் இந்தியாவின் முதல் முழு மென்பொருள் உருவாக்கக் கட்டமைப்பு துளிமக் கணினியினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்திப் பருவத்திற்கான கரும்பின் நியாயமான மற்றும் இலாபகரமான விலையை (FRP) குவிண்டாலுக்கு 355 ரூபாயாக அதிகரிக்க மத்திய அரசு தன் ஒப்புதலை அளித்துள்ளதோடு இது முந்தையப் பருவத்தில் குவிண்டாலுக்கு 340 ரூபாயாக இருந்தது.
- போஸ் நிறுவனத்தின் உயர் ஆற்றல் இயற்பியல் பரிசோதனைக் (HEP) குழுவைச் சேர்ந்த அறிவியலாளர்களுக்கு CERN எனப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பானது, லார்ஜ் ஹாட்ரான் கொலைடருக்கான (LHC) ALICE ஒத்துழைப்பிற்கான அதன் ஒரு பங்களிப்பிற்காக அடிப்படை இயற்பியலில் மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டு திருப்புமுனை பரிசு வழங்கப்பட்டு உள்ளது.
- உள்நாட்டு நடவடிக்கை மூலம் பயன்மிகு, சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கடல் சார் பாதுகாக்கப்பட்டப் பகுதிகளை (MPAs) மேம்படுத்துவதற்காக 'Revive Our Ocean' என்ற புதிய உலகளாவிய முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- புதிய உறுதிப் படுத்தப்பட்டப் பாதிப்புகள் எதுவும் பதிவாகாமல் 42 நாட்கள் அளவிலான கட்டாய காலக்கெடுவினை நிறைவு செய்ததையடுத்து, உகாண்டா அரசானது எபோலா சூடான் வைரஸ் நோய் (SVD) பெருந்தொற்று முடிவுக்கு வந்ததாக அறிவித்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## CCTNS 2.0 குறித்து சென்னை உயர் நீதிமன்றம்

- சென்னை உயர் நீதிமன்றமானது, நான்கு மாதங்களுக்குள் குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு & அமைப்புகளின் (CCTNS) இரண்டாம் (2.0) கட்டத்தினை செயல்படுத்துமாறு தமிழ்நாடு காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.
- உச்ச நீதிமன்றத்தின் இணையக் குழுவானது, ஒரு தேசிய அளவிலான ஒருங்கிணைந்த

குற்றவியல் நீதி அமைப்பு (ICJS) தளத்தினைத் துவக்கியது.

- இது மாநில காவல் துறைகளால் பயன்படுத்தப்படும் CCTNS தளங்கள், நீதிமன்றங்கள் மூலம் பயன்படுத்தப்படும் வழக்கு தகவல் அமைப்பு (CIS) தளங்கள் மற்றும் மின்னணு சிறைச்சாலை மேலாண்மை, இணையத் தடயவியல் மற்றும் இணைய வழி வழக்கு விசாரணை தளங்களை ஒன்றோடொன்று இணைக்கிறது.
- உயர் நீதிமன்றங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றங்கள் முதல் தகவல் அறிக்கைகள் (FIR), வழக்குக் குறிப்பேடுகள், பல்வேறு குற்றப் பத்திரிகைகள் மற்றும் PDF வடிவத்தில் பதிவேற்றப் பட்ட பிற ஆவணங்களை மிக எளிதாக அணுக முடியும் என்பதை உறுதி செய்வதே ICJS தளத்தின் நோக்கமாகும்.
- இந்த ICJS தளத்தினைச் செயல்படுத்துவதற்கு தேசிய தகவல் மையத்துடன் இணைந்து பணியாற்றுமாறு தேசியக் குற்றப் பதிவுகள் வாரியத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## உயிரி வள மையங்களை அமைப்பதற்கான வழிகாட்டுதல்கள்




- தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டத்தின் (NMNF) கீழ் உயிரி உள்ளீட்டு வள மையங்களை (BRC) அமைப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசு வெளியிட்டு உள்ளது.

- ஒவ்வொரு மையத்தையும் அமைப்பதற்கான நிதி ஆதரவாக இதில் 1 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.
- எந்தவொரு BRC தொழில்முனைவோர் குழு/நிறுவனமும் இயற்கை வேளாண்மை முறையினைக் கடைப்பிடிக்க வேண்டும் அல்லது இயற்கை வேளாண்மையில் முன் அனுபவம் உள்ள உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- உள்ளூர் விவசாயிகளின் தேவைகள், உள்ளூர் நிலப் பயன்பாட்டு முறைகள், மண் வகைகள் மற்றும் உள்ளூரில் பயிரிடப்படும் பயிர் முறைகள் ஆகியவற்றின் ஒரு அடிப்படையில் உயிரி உள்ளீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

## நீர்வள நிதிகள் பயன்பாடு 2025

| Fund Utilization | | CSS | | CS | |
|---|---|---|---|---|---|
| | | Last FY 2023-2024 | Current FY 2024-2025 | Last FY 2023-2024 | Current FY 2024-2025 |
| 8 | Funds released by the State Govt. to the SNA account upto the month | 4,822.25 | 5,992.46 | | |
| 9 | SNA/CNA balance at the end of the month | 2,404.98 | 1,347.38 | 1,293.50 | 608.63 |
| 10 | Scheme fund utilization (Actual Expenditure) from SNA/SNA SPARSH/CNA/TSA/Direct PAO during the Month | -849.06 | 3,369.96 | 1,228.73 | 2,102.47 |
| 11 | Cumulative scheme fund utilization (Actual Expenditure) from SNA/SNA SPARSH/CNA/TSA/Direct PAO upto the Month | 10,059.15 | 15,804.73 | 4,978.88 | 5,376.73 |
| 11a | Of which estimated Central share | 5,964.79 | 13,216.34 | 4,978.88 | 5,376.73 |
| 12 | % Utilization of Central share against BE/RE (11a/1) | 49.45 % | 98.39 % | 95.07 % | 81.79 % |

- கடந்த நிதியாண்டில், மார்ச் மாத இறுதிக்குள் சுமார் 98.39 சதவீத நிதி செலவிடப் பட்டு உள்ளதுடன் நீர் வளத் திட்டங்களுக்காக மத்திய அரசினால் வழங்கப்பட்ட முழு நிதி ஒதுக்கீட்டையும் ஜல் சக்தி அமைச்சகம் பயன்படுத்தியுள்ளது.
- மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் (CSS) முதன்மையாக மத்திய அரசால் நிதியளிக்கப் பட்டாலும், இவை பெரும்பாலும் மாநில அரசுகளின் ஒரு பங்களிப்புடன் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படுகின்றன.
- மத்திய அரசின் திட்டங்கள் (Central Sector schemes) என்பவை, மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பு எதுவும் இல்லாமல் மத்திய அரசினால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப் படுகின்றன.
- 13,431.48 கோடி ரூபாய்கள் என்ற மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கான மத்திய நிதி ஒதுக்கீட்டு மதிப்பீட்டினை விட உண்மையான செலவினம் 13,216.34 கோடி ரூபாயாக இருந்தது.
- இதனை ஒப்பிடுகையில், ஒதுக்கப்பட்ட 6,573.73 கோடி ரூபாயில் 5,376.73 கோடி ரூபாய் செலவிடப்பட்டதுடன் மத்திய அரசின் திட்டங்கள் சுமார் 81.79 சதவீதம் என்ற சற்று குறைவான பயன்பாட்டு விகிதத்தைப் பதிவு செய்துள்ளன.
- 2023-24 ஆம் நிதியாண்டில், மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கான ஒரு ஒதுக்கீட்டில் 49.45 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## AIM4NatuRe முன்னெடுப்பு

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, மிகவும் சமீபத்தில் இயற்கை மறு சீரமைப்புக்காக என்று புதுமையான கண்காணிப்பு முறையினைத் துரிதப்படுத்துதல் (AIM4NatuRe) என்ற முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.

- இந்த முன்னெடுப்பிற்கு ஐக்கியப் பேரரசிடமிருந்து 7 மில்லியன் பிரிட்டன் பவுண்ட் நிதி உதவி வழங்கப்படுகிறது.
- இது உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் 30% தரமிழந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பது என்ற குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்கக் கட்டமைப்பின் இரண்டாம் இலக்கினை அடைவதை இது ஆதரிக்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## பணவியல் கொள்கைக்கான முக்கியக் கணக்கெடுப்புகள்




- இந்திய ரிசர்வ் வங்கியானது பணவியல் கொள்கை முடிவுகளுக்கு மிகவும் பயனுள்ள

உள்ளீடுகளைச் சேகரிப்பதற்காக வேண்டி, பணவீக்க எதிர்பார்ப்புகள் உள்ளிட்ட மூன்று முக்கியக் கணக்கெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.

- குடும்பங்களின் பணவீக்க எதிர்பார்ப்புகள் கணக்கெடுப்பு (IESH) ஆனது சுமார் 19 நகரங்களில், அவர்களின் தனிப்பட்ட நுகர்வுத் தொகுப்புகளின் அடிப்படையில், விலை மாற்றங்கள் மற்றும் பணவீக்கம் குறித்த அகநிலை மதிப்பீடுகளைப் பெறுவதை ஒரு நோக்கமாகக் கொண்டது.
- நகர்ப்புற நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பானது (UCCS), மிகவும் பொதுவான ஒரு பொருளாதார நிலைமை, வேலைவாய்ப்புச் சூழ்நிலை, விலைகளின் நிலை மற்றும் குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த அவர்களின் சில கருத்துகள் குறித்து குடும்பங்களிடமிருந்து தரம் சார் பதில்களைக் கோருகிறது.
- கிராமப்புற நுகர்வோர் நம்பிக்கைக் கணக்கெடுப்பு (RCCS) ஆனது, குடும்பங்களின் தற்போதையக் கருத்துகள் மற்றும் ஓராண்டிற்கு முந்தைய அதன் எதிர்பார்ப்புகளைச் சேகரிக்கும்.
- இது 31 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புறங்களில் வசிக்கும் குடும்பங்களிலிருந்து பொதுவானதொரு பொருளாதார நிலைமை, வேலைவாய்ப்புச் சூழ்நிலை, ஒட்டுமொத்த விலை நிலைமை, சொந்த வருமானம் மற்றும் செலவினம் பற்றிய தரவுகளைச் சேகரிக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குய்பர் அகலப்பட்டை இணைய சேவைத் திட்டம்




- அமேசான் நிறுவனத்தின் குய்பர் அகலப்பட்டை இணைய சேவைத் தொகுப்பிற்கான முதல் 27 செயற்கைக்கோள்கள் விண்வெளியில் ஏவப்பட்டுள்ளன.
- இந்த செயற்கைக்கோள்கள் குய்பர் திட்டத்திற்காக புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் அனுப்புவதற்கு அமேசான் நிறுவனத்தினால் திட்டமிட்டுள்ள சுமார் 3,236 செயற்கைக் கோள்களில் முதல் தொகுப்பாகும்.

- இது உலகளவில் உள்ள இணைய சேவை வழங்கப்படாத, கிராமப்புற மற்றும் தொலை தூரப் பகுதிகளுக்கு அகலப்பட்டை இணையத்தை வழங்கும்.
- சுமார் 7,000க்கும் மேற்பட்ட ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்கள் தற்போது பூமியில் இருந்து சுமார் 550 கிலோமீட்டர் உயரத்தில் சுற்றுப் பாதையில் உள்ளன.

### K2-18b புறக்கோளில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள்




- வானியலாளர்கள் K2-18b என்ற புறக்கோளில் உயிரியல் செயல்பாடுகளுடன் தொடர்பு உடைய ஒரு மிகச் சாத்தியமான உயிரியல் அடையாளங்கள் அல்லது கடந்த காலத்தில் உயிர்கள் வாழ்ந்ததற்கான அல்லது தற்போது உயிர்கள் வாழ்வதற்கான பல்வேறு அறிகுறிகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த K2-18b என்ற புறக்கோளின் வளிமண்டலத்தில் டைமெத்தில் சல்பைடு அல்லது DMS இருப்பதையும், டைமெத்தில் டைசல்பைடு அல்லது DMDS இருப்பதையும் அக்குழு கண்டறிந்துள்ளது.
- பூமியில், இரண்டு மூலக்கூறுகளும், பொதுவாக கடல் வாழ் பைட்டோபிளாங்க்டன் எனப்படும் நுண்ணுயிரிகளால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.
- பூமியிலிருந்து 124 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள K2-18b புறக்கோளானது ஒரு ஹைசியன் உலகமாக (திரவ நீர் கொண்ட பெருங்கடல் மற்றும் ஹைட்ரஜன் நிறைந்த வளிமண்டலம்) இருக்கலாம்.
- இந்த சாத்தியமான வாழக்கூடிய கிரகம் ஆனது ஹைட்ரஜன் வாயுவால் நிறைந்த வளிமண்டலத்துடன் கூடியதாகவும் முழுமையாக திரவ நீரினால் சூழப்பட்டதாகவும் உள்ளது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஆர்க்கியாவின் புதிய இனங்கள்

- நுண்ணுயிரியலாளர்கள் மனிதக் குடலில் முன்னர் அறியப்படாத மீத்தேன் உற்பத்தி செய்யும் தொல்லுயிரிகள்/ஆர்க்கியா இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- அவர்கள் அதற்கு மெத்தனோபிரேவிபாக்டர் இன்டெஸ்டினி sp. nov. WWM1085 மாற்றுரு என்று பெயரிட்டனர்.
- இது ஆக்ஸிஜன் இல்லாதச் சூழல்களில் மட்டுமே உயிர் வாழ்கிறது மற்றும் மீத்தேன்

வாயுவினை உற்பத்தி செய்கிறது.

- அந்தக் குழுவானது GRAZ-2 என நன்கு அழைக்கப்படுகின்ற மெத்தனோபிரேவிபாக்டர் ஸ்மிதியின் புதிய மாறுபாட்டையும் அடையாளம் கண்டுள்ளது.
- ஆர்க்கியா என்பது பாக்டீரியா மற்றும் யூகாரியோட்டுகளை மிக நன்கு உள்ளடக்கிய உயிரினங்களின் மூன்று அங்கீகரிக்கப்பட்ட குழுக்களில் ஒன்றாகும்.
- மீத்தனோஜன்கள் எனப்படும் ஆர்க்கியாவின் ஒரு குழுவானது, ஹைட்ரஜன் மற்றும் கார்பன் டை ஆக்சைடை உடைப்பதன் மூலம் மீத்தேன் வாயுவை உற்பத்தி செய்கிறது.
- இந்த நுண்ணுயிரிகள் மனிதர்கள் உட்பட விலங்குகளில் நிகழும் வளர்சிதை மாற்ற செயல்முறைகளுக்கு இன்றியமையாதவையாகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவியக் காற்றாற்றல் உற்பத்தி அறிக்கை 2024

- உலகளாவியக் காற்றாற்றல் சபை (GWEC) ஆனது இந்தப் புதியதொரு மதிப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தற்போதைய வளர்ச்சிக் கணிப்புகள், 2030 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய அளவிலான உமிழ்விற்கான சாத்தியமான வழியைப் பேணுவதற்காக தேவைப்படும் நிறுவப்பட்ட திறனில் சுமார் 77 சதவீதத்தை மட்டுமே இந்தத் துறையானது வழங்கும் என்பதைக் குறிப்பிடுகின்றன.
- 2024 ஆம் ஆண்டில், உலகளவில் 117 ஜிகாவாட் புதிய காற்றாற்றல் உற்பத்தி திறன் அலகுகள் நிறுவப் பட்டது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 116.6 ஜிகாவாட்டிலிருந்து ஒரு சிறிய அதிகரிப்பு ஆகும்.
- மொத்த உலகளாவியக் காற்றாற்றல் மின் உற்பத்தித் திறன் ஆனது தற்போது 1,136 ஜிகாவாட்டாக உள்ளது.
- அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகியவை ஐந்து முன்னணிக் காற்றாற்றல் சந்தைகளில் இடம் பெற்றுள்ளன.
- 2024 ஆம் ஆண்டில், சுமார் 79,824 மெகாவாட் (MW) திறன் கொண்ட புதிய காற்றாற்றல்

நிறுவல்களுடன் சீனா உலகளவில் முன்னிலை வகித்தது.

❖ உஸ்பெகிஸ்தான், எகிப்து மற்றும் சவுதி அரேபியா ஆகியவை காற்றாற்றலை ஏற்றுக் கொண்ட புதிய நாடுகளாக உருவெடுத்தன.

❖ உலகளவில் காற்றாற்றல் மூலம் 56.3 GW ஆற்றல் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டானது, கடல் சார் காற்றாற்றல் உற்பத்தியில் ஒரு திருப்புமுனை ஆண்டாக அமைந்தது.




# மாநிலச் செய்திகள்

## மிசோரமில் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல்




❖ இந்த ஆண்டு மார்ச் 20 ஆம் தேதியிலிருந்து ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் (ASF) பாதிப்பானது மீண்டும் பதிவாகத் தொடங்கியதால் மிசோரமில் ஏராளமான பன்றிகள் உயிரிழந்தன.

❖ ASF என்பது மிகவும் தொற்று மிக்க மற்றும் உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு விலங்கு நோயாகும் என்பதோடு இது வீட்டு வளர்ப்பு மற்றும் காட்டுப் பன்றிகளில் தொற்றி மிகக் கடுமையான இரத்தக் கசிவுக் காய்ச்சலை ஏற்படுத்துகிறது.

❖ வரலாற்று ரீதியாக, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள், தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளில் பெருந்தொற்றுகள் பதிவாகியுள்ளன.

❖ இருப்பினும், 2007 ஆம் ஆண்டு முதல், ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் பல

நாடுகளில், வீட்டு வளர்ப்பு மற்றும் காட்டுப் பன்றிகளில் இந்த நோய் பதிவாகியுள்ளது.

- இதனால் ஏற்படும் இறப்பு விகிதமானது 95% - 100% என்ற அளவினை நெருங்குகிறது என்பதோடு மேலும் இந்தக் காய்ச்சலுக்கு எந்தவித சிகிச்சையும் இல்லாததால், அதன் பரவலைத் தடுப்பதற்கான ஒரே வழி பாதிக்கப்பட்ட விலங்குகளை கொல்வது மட்டுமே ஆகும்.

# முக்கிய தினங்கள்

## மே தினம் 2025 - மே 01

- இது தொழிலாளர் வர்க்க மக்களைக் கொண்டாடுவது, சமூகத்திற்கு அவர்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிப்பது மற்றும் அந்தத் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு கொண்டாட்டமாகும்.
- முதல் தொழிலாளர் தின அணிவகுப்பு ஆனது 1882 ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் மத்தியத் தொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது என்ற நிலையில் இது தொழிலாளர்களின் உரிமைகளின் உலகளாவிய அங்கீகாரத்திற்கு வழி வகுத்தது.
- இந்தியாவில் முதல் தொழிலாளர் தினம் ஆனது 1923 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதி அன்று சென்னையில் இந்துஸ்தான் தொழிலாளர் கிசான் கட்சியின் தலைமையில் அனுசரிக்கப்பட்டது.
- இதற்கு மலையபுரம் சிங்காரவேலு தலைமை தாங்கினார்.




## மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினம் 2025 - மே 01

- 1960 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், இருமொழிகள் கொண்ட பம்பாய் மாநிலம் பிரிக்கப்பட்டு, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய இரண்டு தனி மாநிலங்களாக உருவாக்கப் பட்டன.
- 1950 ஆம் ஆண்டுகளில் சன்யுக்த மகாராஷ்டிரா இயக்கம் மூலம் தனி மராத்தி மொழி பேசும் மாநிலத்திற்கான கோரிக்கை உத்வேகம் பெற்றது.
- 1928 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த மகாகுஜராத் இயக்கம் ஆனது, 1950 ஆம் ஆண்டுகளில் உத்வேகம் பெற்றது.
- அதன் ஆதரவாளர்கள் சௌராஷ்டிரா மற்றும் கட்ச் பகுதியின் சில பகுதிகள் உட்பட குஜராத்தி மொழி பேசும் மக்களைக் கொண்ட அனைத்துப் பகுதிகளையும் ஒன்றாக

இணைக்கும் ஒரு மாநிலத்தினை உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்தனர்.




### உலக சூரை மீன் தினம் 2025 - மே 02




- பசிபிக் தீவு நாடுகளின் ஒரு முன்மொழிவைத் தொடர்ந்து, இந்தத் தினமானது 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது சூரை மீன்களின் பாதுகாப்பை ஊக்குவிப்பதையும், எதிர்காலச் சந்ததியினர் இந்தக் கடல் வளத்திலிருந்து தொடர்ந்து பயனடைய முடியும் என்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சூரை மீன்கள் வெப்பமண்டல மற்றும் மித வெப்பமண்டலக் கடல்களில் காணப்படும் புலம்பெயரும் இனங்கள் ஆகும்.
- அனைத்துக் கடல்வாழ் மீன்வளங்களின் மதிப்பில் 20% மற்றும் உலகளவில் வர்த்தகம் செய்யப்படும் கடல் சார் உணவுகளில் 8% சூரை மீன்கள் ஆகும்.

## இதரச் செய்திகள்

### பசுமை விமான நிலையங்கள் அங்கீகாரம் 2025

- நீடித்த நிலையான எரிசக்தி மேலாண்மையில் சிறந்து விளங்கியதற்காக என ஆசிய-பசிபிக் மற்றும் மத்தியக் கிழக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த பன்னிரண்டு விமான நிலையங்களுக்கு இந்த அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.
- இந்தப் பட்டியலில் மூன்று இந்திய விமான நிலையங்களும் இடம் பெற்றுள்ளன.
- கண்ணூரில் உள்ள பையனூரில் நிலப்பரப்பு அடிப்படையிலான சூரிய மின் நிலையம் அமைத்ததற்காக இவ்விருதைக் கொச்சின் சர்வதேச விமான நிலைய லிமிடெட் (CIAL)

பெற்றுள்ளது.

- கர்நாடகாவில் உள்ள ஹூப்ளி விமான நிலையத்திற்கு பிளாட்டினம் அங்கீகாரமானது வழங்கப் பட்டுள்ளது.
- பெங்களூருவில் உள்ள கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையமானது ஆண்டிற்கு 15-38 மில்லியன் இடையிலான பயணிகளைக் கையாளும் நிலையம் பிரிவில் வெள்ளி அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★